
PDNL
# PALAYAMKOTTAI DIOCESE NEWS LETTER

Vol.53 FEBRUARY 2026 No. 05



*The feast of the presentation of Jesus in the temple On 2nd February*

# ADMINISTRATOR SPEAKS

Dear Fathers, Sisters, Brothers, and Lay Faithful,

Warm greetings to you in the blessed name of our Lord Jesus Christ.

As we enter once again into the holy season of Lent, I extend my prayerful greetings to all of you—priests, men and women in consecrated life, and lay faithful—who together form the living body of Christ in our local Church. Lent is a sacred gift, a privileged time of grace in which the Lord invites us to walk with Him on the path that leads through the desert to the joy of Easter, through the Cross to the glory of the Resurrection.

These forty days are not merely a repetition of familiar practices, but a renewed call to conversion of heart. In the Scriptures, the desert is the place where God speaks to His people, where false securities are stripped away, and where faith is purified and strengthened. Lent invites us into that same interior desert—a space of silence, prayer, and truth—so that we may hear again the voice of the Lord who calls us to repentance, reconciliation, and deeper communion with Him and with one another.

In a world marked by rapid change, uncertainty, and many forms of suffering, the message of Lent is profoundly relevant. It reminds us that lasting renewal—personal, ecclesial, and social—begins not with external change alone, but with the transformation of the human heart by God's grace. The call of Jesus, "Repent and believe in the Gospel," is addressed to each of us, regardless of our state in life, and it remains the foundation of authentic Christian discipleship.

To my brother priests, I express my sincere gratitude for your generous service and pastoral dedication. You carry daily the joys and burdens of God's people, often in hidden and sacrificial ways.

Lent is an invitation for you, in the midst of your ministry, to return to the wellspring of your priesthood: your personal relationship with Christ, the Eternal High Priest. May this season deepen your love for the Eucharist, renew your commitment to prayer, and strengthen you in hope, especially when the demands of ministry weigh heavily upon you. As you proclaim God's mercy to others, may you yourselves experience its healing and power in your own lives.

To the men and women in consecrated life, I offer my heartfelt appreciation for your faithful witness to the primacy of God. Your lives of prayer, community, and evangelical counsel speak eloquently of the Kingdom that is to come. Lent invites you to renew the grace of your consecration, to live ever more fully the charism entrusted to you, and to bear prophetic witness through simplicity, obedience, and joyful self-giving. In a world often captivated by materialism and self-interest, your fidelity is a powerful sign of hope.

To you, dear lay faithful—families, young people, professionals, workers, the sick, and the elderly—Lent is a call to live your baptismal vocation with renewed faith and courage. In the midst of daily responsibilities and challenges, you are called to be witnesses of the Gospel in your homes, workplaces, and communities. Through prayer, acts of forgiveness, concern for the poor, and faithful participation in the sacramental life of the Church, you help transform the world from within. Your daily acts of love, though often unseen, are precious in the eyes of God and essential to the mission of the Church.

The traditional Lenten practices of prayer, fasting, and almsgiving are time-tested spiritual paths that lead us toward authentic freedom. Prayer opens our hearts to God and teaches us to trust in His providence. Fasting helps us detach from what enslaves us and creates space for God and others. Almsgiving forms us in compassion and solidarity, enabling us to recognize Christ in


the poor, the suffering, and the marginalized. When embraced sincerely, these practices draw us closer to God and to one another, strengthening the bonds of communion within the Church.

As a diocesan family, let us walk this Lenten journey together, supporting one another with patience, understanding, and love. May this season help us grow in a spirit of reconciliation, heal divisions, and renew our commitment to serve one another, especially those most in need. Let us remember that we do not journey alone; the Lord walks with us, and His grace sustains us at every step.

Entrusting our Lenten pilgrimage to the loving intercession of the Blessed Virgin Mary, Mother of the Church, I pray that this holy season may be for each of us a time of genuine conversion, renewed faith, and deeper joy in the Lord. May we arrive at Easter with hearts transformed and lives more fully conformed to Christ.

With my blessing and the assurance of my prayers for all of you, I wish you a fruitful and grace-filled Lent.

Yours devotedly in our Lord.



**Rev. Fr. Motcharajan Michael**
Administrator
Diocese of Palayamkottai.

## ADMINISTRATOR’S ENGAGEMENTS

**February - 2026**

| Date | Time | Programme |
|---|---|---|
| 08-11 | | St. Antony’s Feast, Puliyampatti |
| 25- 26 | | Board of Bishops Meeting, Trichy |
| 27-02-2026 | | Bord of Bishops meetings, Christ Hall seminary, Madurai |

## HEARTFELT CONDOLENCES AND PRAYERS

Dear Fr. Joe Varghese (USA)



With deep sorrow, we extend our heartfelt condolences on the passing of your beloved Father Mr. Arulappan Pappaiya (aged 80), who was called to eternal rest in the Lord on January 22, 2026. During this time of grief, please be assured of our prayers and support. May the Lord, in His infinite mercy, grant her eternal peace and strengthen you and your family with His grace and comfort.

**Rev. Fr. Motcharajan Michael**
Administrator
Diocese of Palayamkottai.

## FROM DIOCESAN ADMINISTRATOR'S DESK

**Announcements**

**Dear Brother Priests**

**Recollection**

Recollection for the month of February will be held on 12th Thursday at Bishop's House, Palayamkottai.

10:00 am – Eucharistic Adoration & Confession

11:00 am – Tea

11:30 am – Talk

12:30 pm – Announcements followed by lunch

**Fr. Motcharajan M.**
**Diocesan Administrator**

### This Month Collection

Holy Childhood - To help the poor Children all over the world. February Second Sunday - 08.02.2026

**Rev.Fr. Deepak Michael Raja C., Procurator**

## ANNIVERSARIES

### BIRTHDAYS




02 Feb Fr. Anto P.

07 Feb Fr. Selvaraj M.

11 Feb Fr. Arul Lourdu Edwin

12 Feb Fr. Robins Kavumkal MOC

16 Feb Fr. Amirtha Raj Sundar J.

18 Feb Fr. Antony Masilamani D.

18 Feb Fr. Stephen S.L.

19 Feb Fr. Santiago S.

20 Feb Fr. Siluvai Adimai SDB

24 Feb Fr. Joseph Johnson S.

Dear Fathers, Wish you all the best on your Birthday. May the Lord shower His grace upon you! Many more happy returns of the day!

### FEAST DAYS




**02 Feb Feast of Presentation of Our Lord**

04 Feb Feast of John de Britto

| | |
|---|---|
| Fr. Alphonse Arulanandam | Fr. M. Arul |
| Fr. Arul Dinesh CSC | Fr. Arul Maria Nathan J, |
| Fr. Arul Nesamani | Fr. Arulraj V.K.S, |
| Fr. Arulraj S | Fr. Arulraj S.M. |

11 Feb Our Lady of Lourdes

| | |
|---|---|
| Fr. I. Lourduraj | Fr. Lourdu Michael Wilson M, |
| Fr. Arul Lourdu Edwin | Fr. Lourdu Maria Sudhan S. |

Dear Fathers, May the Lord bless you through the intercession of your Patron Saints! Happy feast!

## ORDINATION DAYS



03 Feb 1991 Fr. Gerry S.

21 Feb 2009 Fr. Britto A. HGN

29 Feb 2022 Fr. Michael Arulraj Arockiasamy SDB

Dear Father, best wishes on your Ordination day. May the Lord bless you in your ministry for His people!

## NECROLOGY



14 Feb 2011 Fr. G.J. Amalan

Let us remember our dear Rev. Fr. G.J. Amalan on 14th February, on the 15th anniversary of his rest in the Lord. May his soul rest in peace!

## ECCLESIASTICAL TRIBUNAL (February 2026)

**The following matrimonial cases have been admitted to the process of nullity:**

1. Immanvel I (Karuthapillaiyur) **Vs** Anitha Mary X (V.K Puram).
2. Nelson Thanislaus S (Shanthi Nagar) **Vs** Divya A (Surandai).
3. Franklin Joseph F (Jawahar Nagar) **Vs** Jency V (Jawahar nagar).
4. Sathish Kumar A (Maharajanagar) **Vs** Paulin Geetha (Tenkasi).
5. Starwin Lydia K (Irudhayakulam) **Vs** Jerome (Keeranur).

**The following marriages have been declared null and void:**

1. Selvamanickam G (KTC Nagar) **Vs** Panner Selvi (Pragasapuram).
2. Diaz Amala Joe S (Karuthapillaiyur) **Vs** Ann Marcina (Palayamkottai).
3. Antony Jebasthiyal Divya I (Nellai Town) **Vs** Viagappa Jeyapaul J (Nellai Town).
4. Sophia G (Karuthapillaiyur) **Vs** Britto Arun Valan I (Anjal Nagar).

Tribunal Income (June 2025 – Jan 2026) is Rs. 29,500/-

**Fr. Victor Raj**
Judicial Vicar

# தமிழக கத்தோலிக்க இளைஞர் இயக்கம்
# பாளையங்கோட்டை மறைமாவட்டம்

## டிசம்பர் & ஜனவரி மாத அறிக்கை

27-12-2025 - யூபிலி நிறைவு விழா கொண்டாட்டத்தோடு நம் மறைமாவட்ட புதிய செயற்குழு மற்றும் நிர்வாகக் குழு தேர்வு நடைபெற்றது. யூபிலி மேய்ப்புப் பணி நிலைய வளாகத்தில் காலை 9.30 மணிக்கு இளையோரின் கலைநிகழ்வுகளோடு விழா ஆரம்பமானது. அருட்திரு. பீட்டர் யூபிலி நிறைவு செய்தி வழங்கினார். பேரருட்திரு. மோட்சராஜன் தலைமையுரையில் இளையோரை உற்சாகமூட்டிப் பேசினார். தேநீர் இடைவேளைக்குப் பின், இளைஞர் பணிக்குழுவின் மாநிலச் செயலர் அருட்திரு. கு.ம. எடிசன் அவர்களும் மற்றும் மாநிலத்தலைவர் ஜெரிஷ் அவர்களும் இணைந்து மறைமாவட்ட செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களை தோழமையாட்சி முறையில் தேர்ந்தெடுக்க உதவி செய்தார்கள். பல்வேறு குழுக்களுக்கான பொறுப்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மதிய உணவோடு நிகழ்வுகள் நிறைவடைந்தன. 150 இளையோர் பங்கு பெற்றனர்.

இளையோரை ஒருங்கிணைக்கவும், அவர்களை வழிநடத்தவும் கீழ்காணும் அருட்தந்தையர்கள் முன்வந்திருக்கிறார்கள்:

| | | |
|---|---|---|
| பாளை மறைவட்டம் | : | அருட்திரு. அருள் அந்தோணி மிக்கேல் (பங்குத்தந்தை, அலவந்தான்குளம்) |
| தென்காசி மறைவட்டம் | : | அருட்திரு. லியோ (பங்குத்தந்தை, வாடியூர்) |
| கோவில்பட்டி மறைவட்டம் | : | அருட்திரு. செல்வின் (பங்குத்தந்தை, கழுகுமலை) |
| சங்கரன்கோவில் | : | அருட்திரு. மிக்கேல் மகேஷ் (பங்குத்தந்தை, சிவகிரி) |
| அம்பை மறைவட்டம | : | அருட்திரு. J. அந்தோணிராஜ் (பங்குத்தந்தை, நாலாங்கட்டளை) |

அருட்தந்தையர்களுக்கு வாழ்த்தும், வரவேற்பும்.

| | | |
|---|---|---|
| 11.01.2026 | - | திருச்சி, பிராட்டியூரில் நடைபெற்ற இளைஞர் இயக்க பொதுக்குழுவிற்கு 5 உறுப்பினர்களோடு செயலர் பங்குபெற்றார். |
| 17.01.2026 | - | இளையோர் மறைவட்ட அளவில் ஒன்றுகூடி பொங்கல் கொண்டாடினார்கள். திருப்பலி நிறைவேற்றி, விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, உணவைப் பகிர்ந்து கொண்ட நிகழ்வு சிறப்பாக |

இருந்தது. வழிகாட்டி அருட்தந்தையர்களுக்கும் மற்றும் உதவி செய்த அருட்தந்தையர்க்கும் நன்றிகள் பல.

அம்பை மறைவட்டம் - நாலாங்கட்டளை

தென்காசி மறைவட்டம் - மேலமெஞ்ஞானபுரம்

சங்கரன்கோவில் மறைவட்டம் - உள்ளார் (சிவகிரி)

**அருட்பணி. விக்டர் ராஜ் ம.**
செயலர்

## பாளையங்கோட்டை மறைமாவட்டம் தொழிலாளர் நலப்பணியகம்

### 2026 - ஜனவரி மாத பணியறிக்கை

29.11.2025

கோவில்பட்டி பங்கு கசவன் குன்று புனித பெர்க்மான்ஸ் ஆலயத்தில் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் சார்பாக தொழிலாளர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் 28.12.2025 அன்று நடைபெற்றது. தலைவர். திரு. ஜான் ஹென்றி அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. தினேஷ் (CITU அமைப்பின் இந்திய மாணவர் படை தூத்துக்குடி மாவட்டம்) அவர்கள் தொழிலாளர் நல வாரியத்தின் நலத்திட்ட அமைப்புகள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு நலன் குறித்து கருத்துரை வழங்கினார்கள்.

நலவாரியத்தின் மூலம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் திருமண உதவித் தொகை, ஓய்வூதியத் திட்டத்தின் பயன்கள் பற்றி உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். இக்கூட்டத்தில் 30 பேர் கலந்து கொண்டார்கள்.

25.12.2025

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கப்பட்டது.

வருடத்தின் முதல் நாள் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை சந்தித்து அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டன.

27.01.2026

அன்று தொழிலாளர் பணிக்குழு ஆண்டு கூட்டம் தஞ்சாவூர் மறைமாவட்ட மேய்ப்புப் பணி மையத்தில் நடைபெற்றது. தஞ்சை ஆயர் மேதகு T. சகாயராஜ் அவர்கள் தொடக்க உரையாற்றினார்கள். தொழிலாளர் பணிக்குழுவின் தலைவர்

மேதகு ஆயர் வின்சென்ட் மார்பவுலோஸ் அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். பாளை மறைமாவட்டத்தின் ஓராண்டுக்கான சான்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலப்பணி குழுவின் சார்பாக திரு. ஜோசப் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் மற்றும் சிஐடியு தொழிலாளர் சங்கம் இணைந்து நடத்தும் ஆதார் அட்டை சிறப்பு முகாம் காமநாயக்கன்பட்டி புனித தெரசாள் துவக்கப்பள்ளியில் நடைபெற்றது.

செயலர்

**அருட்பணி.அருள் லூர்து எட்வின்**

# கிறிஸ்தவ ஒன்றிப்பு குழு மற்றும் பல்சமய உரையாடல் பணிக்குழுவாழ்வு பணிக்குழு

**2026 - ஜனவரி மாத பணியறிக்கை**

28.12.2025 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பாளையங்கோட்டை மகாராஜநகர் ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் வெள்ளி விழா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி சமரச சன்மார்க்க பக்தி ஞான இயக்கம் சார்பில் மதம் கடந்த மகான் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி என்ற தலைப்பில் ஆன்மீக கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாளை மறைமாவட்ட பல் சமய உரையாடல் பணிக்குழு செயலர் அருட்பணி. ச.அருள் லூர்து எட்வின் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

செயலர்

**அருட்பணி.அருள் லூர்து எட்வின்**

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணியகம்

**2026 - ஜனவரி மாத பணியறிக்கை**

மாலை நேர இணைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து 23.12.2025 சிங்கம்பாறை பங்கு சிங்கம்பாறை மற்றும் ஆலங்குளம் பங்கு நாலாங்குறிச்சி, சங்கர் நகர் பங்கு வடக்கு தாழையூத்தில் கிறித்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. கிறிஸ்மஸ் கேக் மற்றும் உணவு பகிர்தலும் நடைபெற்றது.

செயலர்

**அருட்பணி. ச. அருள் லூர்து எட்வின்**

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

**2026 - ஜனவரி மாத பணியறிக்கை**

## I. VBS திட்டமிடல் கூட்டம்:

வருகின்ற ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ள விடுமுறை விவிலியப் பள்ளி VBS பயிற்சி பாசறை குறித்த இரண்டாவது திட்டமிடல் கூட்டம் பணிக்குழு அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கடந்த ஆண்டினைப் போலவே இந்த ஆண்டும் ஐந்து மறைவட்டங்களில் புதிய வடிவிலான பயிற்சி பாசறையை வழங்குவதற்கான கலந்தாய்வு நடைபெற்றது. மேலும் தூத்துக்குடியில் நடைபெறவுள்ள மாநில அளவிலான பயிற்சி பாசறைக்கு பாளையங்கோட்டை மறைமாவட்டத்திலிருந்து வேதியஉகள் உட்பட 10 பேர் செல்ல வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

## II. ஆண்டு இறுதித் தேர்வு வினாத்தாள்கள்:

ஒன்று முதல் எட்டு வரையிலான மறைக்கல்வி, நல்லொழுக்க வகுப்புகளுக்கு ஆண்டு இறுதித் தேர்வு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு சகோதரர்கள் கல்வி கழகம் வழியாக அச்சிட்டு அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

## III. மறைமாவட்ட சிறப்புத் தேர்வு:

24.01.2026 சனிக்கிழமை 9 முதல் 12 முடிய உள்ள வகுப்புகளுக்கு மறைமாவட்ட மற்றும் துறவற சபை பள்ளிகளில் பயிலும் மறைக்கல்வி, நல்லொழுக்க மாணவர்களுக்கான மறைமாவட்ட அளவிலான சிறப்புத் தேர்வு 5 மறைவட்ட மையங்களில் நடைபெற்றது. இச்சிறப்புத் தேர்வில் மொத்தம் 411 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு தேர்வை எழுதினர்.

## IV. பள்ளி சந்திப்பு:

மூன்றாம் பருவத்தில் மறைக்கல்வி, நல்லொழுக்கம் கற்கும் மாணவர்களையும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் விதமாக, வேதியர்கள் தனித்தனியாக அனைத்துப் பள்ளிகளையும் சந்தித்து மறைக்கல்வி வகுப்புகளை இன்னும் மெருகேற்றிடும் வகையில் உற்சாகப்படுத்தி வருகின்றனர். அதன்படி பாளை மறைவட்டம் குறிச்சி புனித தாமஸ் தொடக்கப்பள்ளி, புனித தாமஸ் உயர்நிலைப் பள்ளி, சங்கர்நகர் புனித ஜோசப் தொடக்கப் பள்ளி, கங்கைகொண்டான் ஆர்.சி தொடக்கப் பள்ளி, நாஞ்சான்குளம் ஆர்.சி தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில் மறைவட்டம் மேலக்கலங்கள் ஆர்.சி தொடக்கப் பள்ளி, ஊத்துமலை ஆர்.சி நடுநிலைப் பள்ளி, கோவில்பட்டி மறைவட்டம், கோவில்பட்டி புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி, வெங்கடாசலபுரம் புனித இனிகோ தொடக்கப் பள்ளி, காமநாயக்கன்பட்டி புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளி, தென்காசி மறைவட்டம், தென்காசி வீரமாமுனிவர் ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி, புனித மிக்கேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகள் சந்திக்கப்பட்டது.

## V. பங்குப் பணிகள்:

வாடியூர் பங்கில் உறுதிபூசுதல், அருளடையாளத் தயாரிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**அருட்பணி. ச. லூர்து மரிய சுதன்**

செயலர்

## ஜனவரி - 2026 மாதப் பணியறிக்கை

1. **குழந்தைகள் வரவேற்புப் பிரிவில்** புதிதாக 2 சிறுவர்கள், 17 சிறுமியர் என மொத்தம் 19 பேர் இல்லத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைத் தொடர்வதற்காக 2 குழந்தைகள் பிற இல்லங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது 13 சிறுமியர், 02 சிறுவர்கள் என 15 பேர் இல்லத்தில் உள்ளார்கள்.

2. **குழந்தைத் தத்துத் திட்டத்தில்** இம்மாதம் 2 பெண் குழந்தைகள் தத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது இல்லத்தில் 3 ஆண், 5 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

3. **திறந்த நிலைப் புகலிடத் திட்டத்தில்** இம்மாதம் 1 பெண் குழந்தைத் திட்டத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 20 கிராமங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 12 ஆண், 11 பெண் குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

### சிறப்பு நிகழ்வுகள்

- 15.01.2026 அன்று நமது இல்ல வளாகத்தில் குழந்தைகளோடு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.
- 22.01.2026 அன்று தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் அவர்களின் குழந்தைகள் நலன் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் அவர்கள் கலந்துகொண்டார்கள்.
- 22.01.2026 அன்று குழந்தைகளின் குடும்பங்களை வலுப்படுத்துதல் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திட்டத்தின் சார்பாக நமது பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

**அருட்திரு. அ. ஞானதினகரன்**
இயக்குநர்

## குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

**ஜனவரி மாதப்பணியறிக்கை - 2026**

### 1) திருமண முன் தயாரிப்புப் பயிற்சி பங்கேற்றவர்கள்

| | | |
|---|---|---|
| ஆண்கள் | - | 34 பேர் |
| பெண்கள் | - | 36 பேர் |
| மொத்தம் பங்கேற்றவர்கள் | - | 70 பேர் |

### 2) திருமணத் தகவல் நிலையம்

| | |
|---|---|
| பதிவு செய்தவர்கள் | - 33 பேர் |
| பார்வையிட்டவர்கள் | - 76 பேர் |
| திருமண ஏற்பாடாகியுள்ளோர் | - 13 பேர் |

### 3) திருமண முன் தயாரிப்புப் பயிற்சி விபரம்

| | |
|---|---|
| **பிப்ரவரி 2026** | **06,07.02.2026 முதல் வெள்ளி**காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| | 16, 17.02.2026 மூன்றாம் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| **மார்ச் 2026** | 06,07.03.2026 முதல் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |
| | 20,21.03.2026 மூன்றாம் வெள்ளி, சனி காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை |

அன்புடன்,

**அருட்பணி ஜெமல்ஸ் ஜேம்ஸ்,**

செயலர்

## BP JUDE THANKS

I have to acknowledge the kind and generous gesture of our diocesesan administration towards me.

Yes, I was gifted with a Apple IPad for my Episcopal silver jubilee last December.

And therefore I extend my sincere thanks to the Adminstrator and all the responsible Fathers for the gracious n thoughtful mind.

God bless all. I request your prayers for me. Thanks again.

**+ Jude**

Retd Bp

## ஜனவரி - 2026 மாதப்பணியறிக்கை

**கோல்பிங் இந்தியா:**

* இம்மாதம் வடக்கு மயிலோடையில் வைத்து கோல்பிங் குழு உறுப்பினர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி நடைபெற்றது. மேலும் ரெங்கசமுத்திரத்தில் மாவட்ட அளவிலான ஊக்கப்பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 40 குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
* 20-21.01.2026 ஆகிய தேதிகளில் தேசிய ஒருங்கிணைப்பு குழு கூட்டம் காஞ்சிபுரத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓராண்டு செயல்பாடுகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. இதில் நமது இயக்குநர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்துகொண்டார்கள்.

**சங்கமம் மற்றும் சிறுகடன் திட்டம்**

* சங்கமம் தொடர்பாளர் கூட்டம் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெற்றது. கணக்காளர்கள் கலந்துகொண்டு சேமிப்பு செலுத்தி கடன் பெற்றுச் சென்றனர். சிறுகடன் திட்டத்தில் இம்மாதம் 20 குழுக்களைச் சார்ந்த 283 நபர்கள் பல்வேறு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடன் பெற்றனர் மேலும் தனிநபர் கடன் இம்மாதம் 320 பேருக்கு கொடுக்கப்பட்டது. மேலும் தணிக்கையானது மானூர் I & II, ஓட்டப்பிடாரம், சேரை மற்றும் கீழப்பாவூர் ஆகிய ஒன்றியங்களில் தணிக்கை நடைபெற்றது. இதில் 261 குழுக்களுக்கு தணிக்கை செய்யப்பட்டது.

**நெல்லைசங்கமம்**

* நெல்லை சங்கம நிதி நிறுவனத்தில் இம்மாதம் 9 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**இதர செயல்பாடுகள்**

* 01.01.2026 சிறுபான்மையினர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வைத்து சிறுபான்மையினர்

உரிமைகள் தினம் மாவட்ட ஆட்சியர் மரு.சுகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏழ்மை நிலையில் உள்ள கிறிஸ்தவ மகளிருக்கு ரூ.1,10,000 நிதி உதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இயக்குநர் தந்தை அவர்கள் கலந்து கொண்டார்கள்.

- 08.01.2026 அன்று அலுவலகத்தில் வைத்து மாவட்ட மற்றும் ஒன்றிய கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான ஆண்டு பொதுக்குழு கூட்டம் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் 69 நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.
- 13.01.2026 அன்று TSSS அலுவலகத்தில் வைத்து இயக்குநர் தலைமையில் அனைத்து பணியாளர்களும் இணைந்து சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பணியாளர்களுக்குப் போட்டிகள் நடத்தப்பட்டது.

இயக்குநர்

**அருட்திரு.S.பிரான்சிஸ் சேவியர்**

## பொதுநிலையினர் பணிக்குழு
## பாளையங்கோட்டை மறைமாவட்டம்

**டிசம்பர் & ஜனவரி மாத அறிக்கை**

**1. அரையாண்டு பொதுக்குழு கூட்டம்:**

தமிழக ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழுவின் அரையாண்டு பொதுக்குழுக் கூட்டம் 13.12.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திருச்சிராப்பள்ளி பிராட்டியூரிலுள்ள பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் நடைபெற்றது. பணிக்குழுவின் தலைவர் தஞ்சாவூர் ஆயர் மேதகு. சகாயராஜ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாநிலச் செயலர் அருட்பணி. மரிய மிக்கேல் அவர்கள் மையத்தின் செயல்பாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். பணிக்குழுவின் செயலர் லூர்துசாமி அவர்கள் பணிக்குழுவின் கடந்த அறிக்கையை வாசித்தளித்தார்கள். இரண்டு அறிக்கைகளும் திருத்தங்கள் ஏதுமின்றி ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து

மறைமாவட்ட செயலர்கள் பணியறிக்கையை சமர்ப்பித்தார்கள். நானும் நமது மறைமாவட்ட அரையாண்டு பணியறிக்கையைச் சமர்ப்பித்தேன்.

கூட்டத்தின் நிறைவில் ஆயர் அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவுற்றதும் மையத்தில் நான்கு கட்டங்களாக நடைபெற்ற தொடர் கருத்தாளர் பயிற்சியில் பங்குகொண்டு பயிற்சிபெற்ற பயிற்சியாளர்களுக்கு ஆயர் அவர்கள் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள். நமது மறைமாவட்டத்தின் சார்பாக சங்கர்நகர் பங்கைச் சார்ந்த தம்பதியினர் திரு. ஹாரி பாட்ரிக் அவருடைய துணைவியார் திருமதி. தீபா அவர்களும், சேரன்மகாதேவி பங்கைச் சார்ந்த திருமிகு. மைக்கேல் பெல்லார்மின் அவர்களும் கருத்தாளர்களாக சான்றளிக்கப்பட்டார்கள்.

மேதகு ஆயர் அவர்கள் அனைவருக்கும் வேளாங்கண்ணி குரலமுதம் திருவிவிலிய நாட்குறிப்பேடு - 2026 ஐ கொடையாகக் கொடுத்தார்கள்.

## 2. “மூத்தவர் வணக்கம்”

“மூத்தவர் வணக்கம்” என்ற சிறப்புத் திருப்பலிக் கொண்டாட்டம் திருக்காட்சிப் பெருவிழாவாகிய 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கல்வெட்டான்குழி பங்கு ஆலயத்தில் நிகழ்ந்தது. வீடுகளில் முடங்கி மாதமிருமுறை திவ்விய நற்கருணை பெறுகிற மூத்தவர்களை ஆலயத்திற்கு வரவழைத்து திருப்பலியை நேரில் கண்டுப் பரவசிக்கிற அருள் வாய்ப்பை வழங்கவும் அவர்களை இறைசமூகத்தினர் முன்னிலையில் பெருமைப்படுத்தவும் இந்த வழிபாடு ஒழுங்கு செய்யப்பட்டது. மறைமாவட்டத்தின் மூத்த குருக்களில் ஒருவரான அருட்திரு. சலேத் ஜெயபாலனுடன் இணைந்து தூய சவேரியார் கல்லூரி பேராசிரியர் அருட்தந்தை. லியோலின் ஆரோக்கியசாமி திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். 14 மூத்தவஉகள் திருப்பலியில் கலந்து கொண்டனர். அவர்களே இரண்டு வாசகங்களை வாசித்தனர். மன்றாட்டுக்களை ஏறெடுத்தனர். திருப்பலியின் நிறைவில் மூத்தவர்களுக்கு பங்கின் சார்பாக பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. செயலர் அனைவருக்கும் நூலாடை போர்த்திப்

பெருமை சேர்த்தார். அருட்சகோதரி செல்வி அவர்கள் நிகழ்விற்கான முன்னேற்பாடுகளைச் செய்தார். இச்சிறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்த பங்குத்தந்தை அருட்திரு. அமிர்தராஜ் சுந்தர் அவர்களுக்கும், பங்கு அருட்பணிப் பேரவைப் பொறுப்பாளர்களுக்கும், மரியாயின் சேனையினருக்கும், இளைஞர்களுக்கும் நன்றி பாராட்டி மகிழ்கிறேன்.

**3. தென்காசி மறைவட்டக் கருத்தரங்கு:**

"தலைமை ஏற்க வாங்க, கட்டி எழுப்பத் தாங்க".

Empowering the Laity for Leadership and Community Building என்ற project ஐ முன்னாள் ஆயரும் இந்நாள் மதுரைப்பேராயருமான மேதகு ச. அந்தோனிசாமி D.D., D.C.L., அவர்கள் அனுமதித்ததின் அடிப்படையில் 5 மறைவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டிய கருத்தரங்கின் முதற்பகுதி கருத்தரங்கு தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் ஆலய வளாகத்திலுள்ள அருங்காட்சியக அரங்கில் 24.01.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடந்தது. தென்காசி மறைவட்ட அதிபரும் பண்டாரகுளம் பங்குத்தந்தையுமான அருட்தந்தை S.A. அந்தோணிசாமி அவர்கள் தலைமைத் தாங்கினார். திருநெல்வேலி சமூக சேவைச் சங்கத்தின் மூத்த ஒருங்கிணைப்பாளர் திரு M.A துரைராஜ் M.A. B.Ed அவர்கள் கருத்தரங்கை வழிநடத்தினார். திருமதி. ஏஞ்சலா வியாகப்பன் இறை வேண்டல் செய்து நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். செயலர் அனைவரையும் வரவேற்றார். 12 பங்குகளிலிருந்து 62 பேர் கலந்து கொண்டனர். செல்வி ஜோஸ்லின் ரீட்டா ராணி அனைவருக்கும் நன்றி கூறினார். கருத்தரங்கை நடத்த மனமுவந்து இடம் தந்த பங்குத்தந்தை அருட்திரு. A. ஜேம்ஸ் அவர்களுக்கும் கருத்தரங்கைச் சிறப்பாக நடத்த உதவிய திரு. கிளிட்டஸ் மற்றும் குருமாணவர் பவுல் கிறிஸ்டோபர் அவர்களுக்கும் நன்றி பாராட்டி மகிழ்கிறேன்.

**R. அந்தோனி வியாகப்பன்**

செயலர்

# நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு

**பணியறிக்கை - ஜனவரி 2026**

ஜனவரி 16,17&18 (வெள்ளி, சனி & ஞாயிறு) தினங்களில் பாளையங்கோட்டை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வைத்து 3 நாட்கள் உள்ளிருப்புத் தியானம் நடைபெற்றது. பேரருட்சகோ. விக்டர் தாஸ் SHJ தொடங்கி வைத்தார். அருட்திரு. ஜோசப் கென்னடி, மேனாள் ஆயர் மேதகு ஜூடு பால்ராஜ், அருட்திரு. பாஸ்கர் திருப்பலி நிறைவேற்றினர். சகோ. ஜான்சன், சாலக்குடி அருட்சகோதரி. நிர்மலா இறைசெய்தி, ஆராதனையில் வழிநடத்தினர். 150 பேர் கலந்து இறையனுபவம் பெற்றனர்.

ஜனவரி 18 (ஞாயிறு) அன்னை தெரசா மண்டபம், மறைமாவட்ட தூய அந்தோணியார் திருத்தலத்தில் புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. அருட்திரு. ரூபஸ் S.J. திருப்பலி நிறைவேற்றினார். சகோ. ஜாண்சன் இறைசெய்தி வழங்கினார். 100 பேர் கலந்து ஆசீர் பெற்றனர்.

ஜனவரி 25,26 குழந்தை இயேசு திருத்தலம், சாந்திநகரில் 2 நாள் சிறப்பு குணமளிக்கும் செபக்கூட்டம் நடைபெற்றது. சகோ. சஜீத் ஜோசப் இறைசெய்தி வழங்கினார். அருட்திரு. லாரன்ஸ், அருட்திரு. ஜெமல்ஸ், அருட்திரு. பீட்டர் திருப்பலி நிறைவேற்றினர். 1000 பேர் கலந்து கொண்டனர். அநேகர் சுகம் பெற்று வீடு திரும்பினர்.

ஜனவரி 31 முழுஇரவு திருவிழிப்பு செபத்தில் அருட்சகோதரி. ரேண்சம் இறைசெய்தி வழங்கினார். அருட்திரு. ஜெமல்ஸ் திருப்பலி நிறைவேற்றினார். 100 பேர் கலந்து கொண்டனர்.

**கத்தோலிக்கப் புதுவாழ்வு இயக்கம்:**

புதிய ஆண்டின் முதல் மாதத்தில் முதல் சனிக்கிழமை தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலம், (03/01/26) ஆசாரிப்பள்ளம் புனித அன்னாள் துறவு மடம், கோட்டாறு மறைமாவட்டம் சின்னவிளை, சென்னை புனித

தோமையார் மலையில் MSFS இல்லம் போன்ற இடங்களில் புத்தாண்டு ஆசீர்வாத கூடுகை நடைபெற்றது.

மாதத்தின் முதல் ஞாயிறு (04/01/26) புதுவாழ்வு தியான நிலையத்தில் வாக்குத்தத்தக் கூடுகை நடைபெற்றது. நற்செய்திப் பணிக்குழு செயலர் அருட்தந்தை V.K.S. அருள்ராஜ் அடிகளார் திருப்பலி நிறைவேற்றி இறைச்செய்தியளித்தார்கள்.

மாதத்தின் முதல் திங்கள் சென்னை ராயப்பேட்டை, முதல் வியாழன் நெசப்பாக்கம், முதல் வெள்ளி ஆலங்குளம், பாவூர்சத்திரம் போன்ற பகுதிகளில் நற்செய்திக்கூட்டம் நடைபெற்றது.

பௌர்ணமி இரவு செபம் 03.01.26 சனி இரவு புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது. மாதத்தின் 2ம் சனி (10.01.26) அம்பை, இலுப்பையூரணி போன்ற இடங்களில் வாக்குத்தத்த கூடுகை நடைபெற்றது.

நற்செய்திப்பணியாளர்களுக்கான கூடுகையில் (12.01.26) புதுவாழ்வு குழுவினர் ஆராதனை மடத்தில் கலந்து கொண்டனர். பொங்கல் விடுமுறை நாட்களான 16,17,18 (வெள்ளி-ஞாயிறு) தேதிகளில் வல்லமை உபவாச முகாம் புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது. அருட்தந்தை. S. அந்தோணிராஜ், அருட்தந்தை. எட்வின் (கம்மாபட்டி) ஆகியோர் கலந்து கொண்டு செய்தியளித்தனர்.

17.01.26 சனி மாலை 5.30 மணி முதல் 8 மணி வரை மாலை நேர நற்செய்திக்கூடுகையும், 18.01.26 ஞாயிறு அமாவாசை இரவு திருவிழிப்பு செபம் புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

திருமலாபுரம், அருணாச்சலபுரம், களக்குடி, உக்கிரங்கோட்டை போன்ற பகுதிகளில் நற்செய்திக்கூட்டம் நடைபெற்றது.

22-25 தேதிகளில் (வியாழன்-ஞாயிறு) இம்மாதத்திற்கான சிறப்பு உள்ளிருப்புத்தியானம் புதுவாழ்வு தியான நிலையத்தில் நடைபெற்றது.

இருதயநகர் (உடையார்பட்டி) ஆலயத்தில் 24.1.26 சனிக்கிழமை ஆசீர்வாத கூடுகை நடைபெற்றது.

2026ம் ஆண்டுக்குரிய விவிலிய நாட்குறிப்புக்கள் உள்ளடக்கிய பஞ்சாங்கம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு 2000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

புதுவாழ்வு தியான நிலையத்தில் பரிந்துரை செபமும், தொலைபேசியில் வரும் விண்ணப்பங்களுக்கு செபிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு நாளும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள்மீட் (இணையதளம்) வழியாக எழுப்புதல் பரிந்துரை செபம் 1000 நாட்களைக் கடந்து நடைபெற்று வருகின்றது.

**அருள்பணி V.K.S. அருள்ராஜ்**

செயலர்

## அன்பியம் பணிக்குழு

### 2026 - ஜனவரி மாத பணியறிக்கை

ஜனவரி மாதம் அன்பிய மாதமாக கொண்டாடப்பட்டது. அன்பியங்கள் மத்தியில் ஆர்வத்தை தூண்டி எழுப்பும் பொருட்டு மறைவட்ட அளவிலான அன்பிய கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. கட்டுரை போட்டி மற்றும் நடன போட்டிகள் பற்றிய விபரம் முன்னரே அறிவிக்கப்பட்டு, மறைவட்ட அதிபர்கள் தலைமையில் மற்றும் பங்குத் தந்தையர்கள் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டன.

| வ. எண் | தேதி | மறைவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 01 | 04.01.2026 | கோவில்பட்டி | தூய பரலோக அன்னை திருத்தல பேராலய வளாகம், காமநாயக்கன்பட்டி. |
| 02 | 18.01.2026 | சங்கரன்கோவில் | உலக மீட்பர் ஆலய வளாகம், புளியங்குடி. |
| 03 | 25.01.2026 | தென்காசி | தூய மிக்கேல் அதிதூதர் திருத்தல வளாகம், தென்காசி. |

எல்லா பங்குகளிலுமிருந்தும் மக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். அன்பிய மக்களை உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்த அனைத்துப் பங்குத் தந்தையர்களுக்கும், பங்கேற்றவர்களுக்கும் பாராட்டுகள்.

**அன்பியங்கள் சந்திப்பு**

அன்பியம் பணிக்குழு சார்பாக அகரகட்டு பங்கிலுள்ள 22 அன்பியங்கள் சந்திக்கப்பட்டன. அன்பிய கூட்டங்கள் ஏழு படி முறைகளின்படி முறையாக நடத்திடவும், இல்லங்களில் வைத்து மட்டுமே, அன்பிய கூட்டங்கள் நடத்திடவும் வலியுறுத்தப்பட்டன. மேலும் விருப்பு வெறுப்புகளை கடந்து, தொடக்க காலத் திருஅவையை நினைவு கூறும் விதமாக அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், நீதி, பகிர்வு, மன்னிப்பு போன்ற இறையரசின் விழுமியங்களை அடிப்படையாகக்கொண்டு அன்பியங்களை கட்டி எழுப்பிட வழிகாட்டப்பட்டன. ஏற்பாடுகளை சிறப்பாக செய்து கொடுத்த, பங்குத்தந்தை அருட்பணி. அலோசியஸ் துரைராஜ் மற்றும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட அன்பியம் பணிக்குழு உறுப்பினர்களுக்கு சிறப்பான நன்றி.

**அருட்பணி. அ. பீற்றர்,**
செயலர்

## யூபிலி 2025 நிறைவு விழா

கிறிஸ்து பிறப்பின் யூபிலி 2025-னை, நமது காலம் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் “எதிர்நோக்கின் திருப்பயணிகள்” என்ற மையக்கருத்தின் அடிப்படையில் கடந்த 2024-டிசம்பர் 24ம் தேதி தொடங்கி வைத்ததோடு, உலகமெங்கிலும் திருஅவை யூபிலியை கொண்டாட அழைப்பு விடுத்தார்கள். நமது மறைமாவட்டத்தில் முன்னாள் ஆயர் மேதகு. அந்தோனிசாமி சவரிமுத்து D.D., D.C.L., அவர்கள் யூபிலியை தொடங்கி வைத்து, நான்கு திருத்தலங்களை (பாளையங்கோட்டை தூய சவேரியார் பேராலயம், காமநாயக்கன்பட்டி தூய பரலோக அன்னை திருத்தல பேராலயம், புளியம்பட்டி புனித அந்தோணியார் திருத்தலம், தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலம்) அறிவித்து அத்திருத்தலங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டு,

தயாரிப்புடன் வழிபாட்டில் பங்கேற்று, இறைமக்கள் பரிபூரண பலன் பெற வழிகாட்டினார்கள்.

யூபிலி கொண்டாட்டத்தின் முன் தயாரிப்பாக 2023-ஆம் ஆண்டு “கற்றலின் ஆண்டாக” கொண்டாடப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் நான்கு ஏடுகளை (இறைவெளிப்பாடு, திருவழிபாடு, திருஅவை, இன்றைய உலகின் திருஅவை) மறுவாசிப்பு செய்யவும் திருஅவையை ஆழமாக அறிந்து கொள்ளவும் மறைவட்ட அளவில் கருத்தரங்கங்கள் மூலம் வழிகாட்டப்பட்டன. 2024 ஆம் ஆண்டு “இறைவேண்டலின் ஆண்டாக” சிறப்பிக்கப்பட்டது. இறைவனோடு உள்ள அன்பில், உறவில், நெருக்கத்தில் வளரும் பொருட்டு இறைவேண்டலின் அவசியத்தை உணர்த்தும் விதமாக செபப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு பங்குதந்தையர்கள் மூலம் வழங்கப்பட்டன.

கிறிஸ்து பிறப்பின் யூபிலி 2025 - நிறைவு விழா 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை நமது மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு.மோட்சராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மதியம் 4 மணிக்கு செட்டிகுளம் பங்குத்தந்தை, அருள் முனைவர் ஜோமிக்ஸ் அவர்கள் நற்கருணை எழுந்தேற்றம் செய்து ஒரு மணி நேரம் நற்கருணை ஆராதனையை வழி நடத்தினார்கள். அவ்வேளையில் யூபிலின் மைய செய்தியான “எதிர்நோக்கு” பற்றி விளக்கம் அளித்தார்கள். தொடர்ந்து ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது

மாலை 05:30 மணிக்கு யூபிலி நிறைவு விழா திருப்பலியானது மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு.மோட்சராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கரன்கோவில் மறைவட்ட அதிபர் அருட்பணி. ஜோசப் கென்னடி அவர்கள் யூபிலி குறித்து மறையுரை வழங்கினார்கள். திருப்பலி நிறைவில் யூபிலி குழு ஒருங்கிணைப்பாளர் அவர்கள் “எதிர்நோக்கை” அனைவரது வாழ்விலும் பற்றியெரிய செய்யவும் தக்கவைக்கவும், அதனை அனைவருக்கும் வழங்கிடவும் வலியுறுத்தினார்கள். மேலும் யூபிலி விழா சிறப்பாக நடைபெற உதவிய முன்னாள் ஆயர் மேதகு.அந்தோணிசாமி, மறைமாவட்ட பரிபாலகர், யூபிலி குழு உறுப்பினர்கள், ஒத்துழைப்பு நல்கிய மறைவட்ட அதிபர்கள் பங்குத்தந்தையர்கள் என அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார்கள்.

இவண்

**அருட்பணி. அ. பீற்றர்**

# PARISH MONTHLY COLLECTION
## (September to November - 2025)

| S.No | Parish Name | Bible Sunday Sep'2025 | Mission Sunday Oct'2025 | African Mission Nov'2025 | St. Peter's Apostle Nov' 2025 |
|---|---|---|---|---|---|
| 1 | Agarakattu | 4,530.00 | - | - | - |
| 2 | Alangulam | 2,000.00 | 15,970.00 | - | - |
| 3 | Alavanthankulam | 3,000.00 | 15,000.00 | 1,500.00 | 1,500.00 |
| 4 | Ambasamuthuram | 5,290.00 | 63,820.00 | 2,450.00 | 2,450.00 |
| 5 | Avudayanoor | 3,570.00 | 91,740.00 | 1,765.00 | 1,765.00 |
| 6 | Cheranmahadevi | 6,082.00 | 77,804.00 | 3,392.00 | 3,391.00 |
| 7 | Chidambarapuram | 1,520.00 | 72,000.00 | 1,050.00 | 1,050.00 |
| 8 | Duraisamypuram | 800.00 | 8,100.00 | - | - |
| 9 | Ilayarasanendal | 1,400.00 | - | - | - |
| 10 | Iruthayakulam | 4,462.00 | 26,000.00 | 2,100.00 | 2,100.00 |
| 11 | Iruthayanagar | 6,040.00 | 46,500.00 | - | - |
| 12 | Jawaharnagar | 22,000.00 | 8,06,000.00 | - | - |
| 13 | Kadayam | 2,500.00 | 30,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 14 | Kallidaikurichy | 3,100.00 | 15,000.00 | - | - |
| 15 | Kalugumalai | - | - | - | - |
| 16 | Kamanayakanpatti | 7,010.00 | 1,85,273.00 | 4,095.00 | 4,095.00 |
| 17 | Karuthapillaiyur | 3,320.00 | 15,000.00 | 3,150.00 | 2,075.00 |
| 18 | Kayathar | 3,200.00 | 36,600.00 | 3,400.00 | 2,500.00 |
| 19 | Kovilpatti | - | 1,25,000.00 | - | - |
| 20 | Kuruvikulam | 1,150.00 | 10,560.00 | 785.00 | 785.00 |
| 21 | KTC Nagar | 3,500.00 | 56,300.00 | 1,750.00 | 1,750.00 |
| 22 | Maharajanagar | 7,930.00 | 55,200.00 | - | - |
| 23 | Melailandaikulam | 1,200.00 | 19,000.00 | 1,200.00 | 1,100.00 |
| 24 | MelaMeignanapuram | - | - | - | - |
| 25 | Nallatinputhur | 2,410.00 | 11,550.00 | 2,610.00 | 1,500.00 |
| 26 | Nettur | 1,000.00 | 16,815.00 | - | - |
| 27 | Palayamchettikulam | - | - | - | - |
| 28 | Palayamkottai | 24,810.00 | 4,20,700.00 | 15,970.00 | 15,970.00 |
| 29 | Pandarakulam | 1,500.00 | 5,000.00 | 735.00 | 735.00 |

| S.No | Parish Name | Bible Sunday Sep'2025 | Mission Sunday Oct'2025 | African Mission Nov'2025 | St. Peter's Apostle Nov' 2025 |
|---|---|---|---|---|---|
| 30 | Pavoorchatram | 2,500.00 | 33,326.00 | 805.00 | 805.00 |
| 31 | Pettai | - | - | - | - |
| 32 | Puliankudi | 3,280.00 | 13,900.00 | 2,000.00 | 2,000.00 |
| 33 | Puliampatti | 9,520.00 | 71,892.00 | 2,873.00 | 2,872.00 |
| 34 | Sankarankoil | 900.00 | 41,030.00 | 300.00 | 300.00 |
| 35 | Sankarnagar | 2,655.00 | 21,539.00 | 1,428.00 | 1,428.00 |
| 36 | Sendamaram | 3,144.00 | 1,05,000.00 | 1,560.00 | 1,560.00 |
| 37 | Shanthinagar | 2,000.00 | 1,43,695.00 | 1,000.00 | 1,000.00 |
| 38 | Singamparai | 4,800.00 | 40,000.00 | 2,375.00 | 2,375.00 |
| 39 | Surandai | 1,866.00 | - | - | - |
| 40 | Tirunelveli Town | 4,572.00 | - | 2,667.00 | 2,666.00 |
| 41 | Tenkasi | 9,850.00 | 1,13,521.00 | 3,996.00 | 3,995.00 |
| 42 | Uthumalai | 2,156.00 | 18,880.00 | - | - |
| 43 | Vadiyoor | 2,300.00 | 25,000.00 | 1,250.00 | 1,250.00 |
| 44 | Vandanam | 682.00 | 31,000.00 | 290.00 | 290.00 |
| 45 | Veeravanallur | 2,770.00 | 50,000.00 | - | - |
| 46 | Velayuthapuram | 1,800.00 | 20,000.00 | 800.00 | 800.00 |
| 47 | Venkatachalapuram | 2,300.00 | 30,500.00 | 2,120.00 | 2,000.00 |
| 48 | Vickramasingapuram | 5,000.00 | 19,500.00 | 2,500.00 | 2,500.00 |
| 49 | Xavier Colony | 3,612.00 | 50,540.00 | 1,773.00 | 1,772.00 |
| 50 | Thalarkulam | 2,000.00 | 7,000.00 | 1,075.00 | 1,075.00 |
| 51 | Nalamkattalai | 1,245.00 | - | - | - |
| 52 | Kalvettankuli | 3,500.00 | 20,000.00 | 1,750.00 | - |
| 53 | Shencottai | 1,000.00 | 9,000.00 | - | - |
| 54 | Vallam | - | - | - | - |
| 55 | Vaikalipatti | 1,390.00 | 20,000.00 | 700.00 | 765.00 |
| 56 | Sivagiri | - | 31,198.00 | - | - |
| 57 | Rengasamuthiram | 826.00 | 40,500.00 | - | - |
| 58 | Kammapatty | - | - | - | - |
| 59 | Thannuthu | - | - | - | - |
| 60 | Arockiyanathapuram | 1,150.00 | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 61 | Education Commission | - | 2,00,000.00 | - | - |
| | Total | 2,00,142.00 | 33,91,953.00 | 79,214.00 | 74,219.00 |


We appreciate and thank all the Parish Priests and Parishioners for their valuable contribution.

We specially thank the Parish Priests and the Parishioners of Jawaharnagar, Palayamkottai, Education Commission, Kamanayakkanpatti, Shanthinagar, Kovilpatti, Tenkasi, Sendamaram, who have made a higher contribution.

# ஆயரின் நல நிதிகள்

**ஜனவரி - 2026**

| | |
|---|---|
| **குருமாணவர் நல நிதி** | |
| திருமதி. கலைச்செல்வி, வள்ளியூர் | 15,000.00 |
| திரு. ஜாண் பிரிட்டோ | 6,000.00 |
| திருமதி. ஜெஸ்டின் மேரி, சேரன்மகாதேவி | 5,000.00 |
| திருமதி. D. ஆரோக்கியமேரி தியாகராஜன் | 3,000.00 |
| திருமதி. மரிய செல்வமேரி | 2,000.00 |
| திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | 31,500.00 |
| இம்மாதம் வழங்கியது | **31,500.00** |
| **ஏழை மாணவர் கல்வி நிதி** | |
| முன் கையிருப்பு | 1,23,812.00 |
| இம்மாதம் வழங்கியது | 33,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **90,812.00** |
| **குடும்ப நல நிதி** | |
| முன் கையிருப்பு | 5,43,647.00 |
| இம்மாதம் வழங்கியது | 20,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **5,23,647.00** |
| **மருத்துவ நல நிதி** | |
| முன் கையிருப்பு | 12,896.00 |
| இம்மாதம் வழங்கியது | 5,000.00 |
| மொத்த இருப்புத்தொகை | **7,896.00** |
| **நற்செய்திப் பணி நிதி** | |
| முன் கையிருப்பு | 2,19,250.00 |
| திருமதி. ரோசரி, சேரன்மகாதேவி | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | **2,19,750.00** |
| **விவிலிய நிதி** | |
| மொத்த இருப்புத்தொகை | **1,58,620.00** |



*Ash Wednesday 18th February*

**For Private Circulation only**
Edited & Published by
REV. FR. XAVIER DEVASAGAYAM
CHANCELLOR, CATHOLIC BISHOP'S HOUSE, P.B.No. 108, PALAYAMKOTTAI-2
e-mail : chancellor@palayamkottaidiocese.org
Web : www.palayamkottaidiocese.org